**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 78/2015**

**வழக்கு சாட்சி: PW.10**

**தேதி: 12.01.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **ஸ்டானிஸ்பால்மாஸ்கி** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **அருள் ஆரோக்கியசாமி** | **தொழில்:** | **மருத்துவர்** |
| **கிராமம்:** | **மதுரை** | **சமயம்:** | **கிறிஸ்தவர்** |
| **தாலுகா:** | **மதுரை** | **வயது:** | **37/2024** |

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.)

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

ஆய்வாளர் என்னை விசாரணை செய்யும் போது ஆயுதம் எதையும் என்னிடத்தில் காட்டி விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் பிரேத பரிசோதனை செய்த 3 பெண் சடலங்களில் ஏற்பட்டுள்ள காயங்கள் வெவ்வேறு நபர்களால் வெவ்வேறு திசைகளிலிருந்து ஏற்படுத்த வாய்ப்புள்ளதா என்றால் ஒரே நபரால் பல்வேறு திசைகளிலிருந்தும் காயங்கள் ஏற்படுத்த வாய்ப்புண்டு. அதேப்போல் வெவ்வேறு நபர்களால் வெவ்வேறு திசைகளிலிருந்து காயங்கள் ஏற்படுத்தவும் வாய்ப்புண்டு. காயங்களின் நீள அகலங்களைப் பொறுத்து வெவ்வேறு ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புண்டு. பிரேதங்களில் ஏற்பட்டுள்ள காயங்களின் நிறத்தை நான் என் அறிக்கைகளில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயங்களின் நிறத்தை வைத்து காயத்தை ஏற்படுத்திய நேரத்தை குறிப்பிட முடியுமா என்றால் இல்லை. குறிப்பிட முடியும் என்று சொன்னால் சரியல்ல. பிரேதத்திலிருந்து எடுக்கப்படும் இரத்த மாதிரிகளை வைத்தும் காயத்தை ஏற்படுத்திய ஆயுதத்திலிருந்து எடுக்கப்படும் இரத்த மாதிரிகளை வைத்தும் இறந்த நபரின் இறப்பு குறிப்பிட்ட ஆயுதத்தால் தான் ஏற்பட்டதா என்பதை கணிக்க இயலுமா என்றால் இயலும். நான் பிரேத பரிசோதனை செய்த திருமதி.ஆறுமுகம் என்பவருக்கு நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கையில் உள்ள 1வது காயமானது கூர்மையான கத்தியால் அறுப்பதாலும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. நான் பிரேத பரிசோதனை செய்த திருமதி.தனபாக்கியம்

என்பவருக்கு நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கையில் உள்ள 5வது காயமானது கூர்மையான ஆயுதத்தால் அறுத்தால் மட்டும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அதே அறிக்கையில் உள்ள பின்னந்தலையில் ஏற்பட்டுள்ள காயமானது அந்த நபரின் பின்னால் இருந்து காயத்தை ஏற்படுத்தலாம் என்றால் சரிதான். பொதுவாக, இறந்த உடலை உடல் தட்பவெப்பம், Rigor mortis status, உடல் அழுகும் தன்மை, வயிற்றில் உள்ள ஜீரணமடைந்த உணவுப் பொருட்கள், இரத்தம் தங்கும் நிலை ஆகிய நிலைகளை வைத்து இறந்த நேரத்தை தோராயமாக குறிப்பிடலாம் என்றால் சரிதான். நான் பிரேத பரிசோதனை செய்த ஆறுமுகம் என்பவரின் பிரேதமானது நான் பிரேத பரிசோதனை செய்யும் நேரத்திற்கு முன்பாக 10லிருந்து 14 மணிநேரத்திற்குள்ளாக இறப்பு ஏற்பட்டிருக்கலாம் எனவும், நான் பிரேத பரிசோதனை செய்த தனபாக்கியம் என்பவரின் பிரேதமானது நான் பிரேத பரிசோதனை செய்யும் நேரத்திற்கு முன்பாக 10லிருந்து 14 மணிநேரத்திற்குள்ளாக இறப்பு ஏற்பட்டிருக்கலாம் எனவும், நான் பிரேத பரிசோதனை செய்த இராஜேஸ்வரி என்பவரின் பிரேதமானது நான் பிரேத பரிசோதனை செய்யும் நேரத்திற்கு முன்பாக 12லிருந்து 16 மணிநேரத்திற்குள்ளாக இறப்பு ஏற்பட்டிருக்கலாம் எனவும் நான் எனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். பகுதி செரிமானம் என்பது சாப்பிட்ட நேரத்திலிருந்து 3 மணிநேரம் கழித்து செரிமானம் ஆரம்பித்துவிடும் என்றால் சரியல்ல. சாப்பிட ஆரம்பிக்கும்பொழுது வாயிலிருந்தே செரிமானம் ஆரம்பித்துவிடும். உணவு பெருங்குடலை தாண்டிவிட்டால் முழுமையாக ஜீரணமாகிவிடும். வயிற்றிலுள்ள உணவுப் பொருட்கள் பகுதி செரிமான நிலையில் உள்ளதாக எடுத்துக் கொள்ளலாம். நான் பிரேத பரிசோதனை அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ள பகுதி செரிமான உணவுகளின் நிறங்களை எனது அறிக்கைகளில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயங்கள் ஏற்பட்ட நேரத்திலிருந்து எவ்வளவு நேரத்தில் ஒரு நபருக்கு இறப்பு ஏற்படும் என்றால் அது ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் உடல்வாகைப் பொறுத்தது. நான்பிரேத பரிசோதனை செய்த 3 பெண் பிரேதங்களில் ஏற்பட்ட காயங்களிலிருந்து எவ்வளவு நேரம் கழித்து இறப்பு ஏற்பட்டிருக்கும் என்பதை துல்லியமாக கணிக்க இயலாது. நான் எனது பிரேத பரிசோதனை அறிக்கைகளில் இறந்த நபர்களின் நேரத்தை காவல் துறையினர் சொல்லியதை வைத்து தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தவறு. நான் வழங்கியுள்ள பிரேத பரிசோதனை அறிக்கைகளில் உள்ள பெரும்பாலான தகவல்கள் காவல் துறையினர்

கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.